www.kalvikural.com

தமிழ்நாடு தொடக்கக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை–6

ந.க.எண்.0249 8/டி3/2013, நாள் [illegible].10.2013

பொருள் தொடக்கக் கல்வி – திண்டுக்கல் மாவட்டம் – ஆசிரியர் பொது மாறுதல் கலந்தாய்வு – 2013–2014–ஆம் கல்வியாண்டில் ஊராட்சி ஒன்றிய, நகராட்சி, தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு மாறுதல் – சார்பு

1. அரசாணை (1டி) எண். 29, நாள் 08.05.2013.
2. திண்டுக்கல் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலரின் ந.க.எண்.1704/அ2/2013, நாள் 17.07.2013.
3. இவ்வலுவலக ந.க.எண்.24908/டி3/2013, நாள் 30.09.2013
4. அரசாணை (1டி) எண்.297, பள்ளிக் கல்வி (தொ.க.3(2) துறை, நாள் 17.10.2013.

-------.

பார்வை 2–ல் காணும் திண்டுக்கல் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலரின் கடிதத்தில் 2013–2014–ஆம் கல்வியாண்டு பொது மாறுதல் கலந்தாய்வில், குஜிலியம்பாறை ஒன்றியத்தில் எல்.செட்டியூர் தொடக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டு 2013 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடுநிலைப்பள்ளித்தலைமை ஆசிரியர் பணியிடம் எஸ்.எஸ்.ஏ. மூலம் வழங்கப்பட்டதால் அப் பள்ளிக்கு நடுநிலைப்பள்ளித் தலைமை ஆசிரியராகப் பதவி உயர்வு வழங்கும்போது அப்பள்ளியில் இடைநிலை தலைமை ஆசிரியராக பணியாற்றிய திருமதி.அமுதா என்பாருக்கு நிர்வாக மாறுதல் வழங்கப்பட்டதாகவும், 2013–2014–ஆம் ஆண்டு கலந்தாய்வில் நிர்வாக காரணமாக மாறுதல் வழங்கப்பட்ட இடைநிலை தலைமை ஆசிரியர் திருமதி.அமுதா என்பாருக்கு மாறுதல் கலந்தாய்வில் முதலில் வைத்து முன்னுரிமை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டபோது திருமதி.இந்திரா என்பார் தனது ஊனத்தைக் காட்டி தனக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனக் கூறி பிரச்சனை எழுந்ததால் மேற்படி கலந்தாய்வு

D:\October 2013\D3 Sec\Thindukkal Kalanth iyu.docx

www.kalvikural.com



நிறுத்தப்பட்டதாகத் தெரிவித்து குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கலந்தாய்வு நடத்திட அறிவுரை வழங்குமாறு வேண்டியுள்ளார்.

இப்பொருள் சார்ந்து உரிய ஆணை வழங்க வேண்டி பார்வை 3–ல் காணும் இவ்வலுவலகக் கடிதத்தின்படி அரசுக்கு கருத்துருக்கள் பணிந்தனுப்பப்பட்டது.

அதற்கு பார்வை 4–ல் காணும் அரசாணையில், தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் பொழுது நிர்வாக காரணமாக மாறுதல் செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பொது கலந்தாய்வு மாறுதலில் முன்னுரிமை வழங்கிய பின்னர், பொது மாறுதல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணை (1டி) எண்.129, பள்ளிக் கல்வி, நாள் 08.05.2013–இல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி கலந்தாய்வு நடத்துமாறு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரசாணையின் நகல் தக்க நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

எனவே மேற்படி அரசாணையின்படி குஜிலியம்பாறை ஒன்றியத்தில் கலந்தாய்வினை உடனடியாக நடத்தி அறிக்கையினை துரித அஞ்சலில் அனுப்புமாறு திண்டுக்கல் மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு–1.

தொடக்கக்கல்வி இயக்குநர்

பெறுநர்
மாவட்டத் தொடக்கக்கல்வி அலுவலர், திண்டுக்கல்.

D:\October 2013\D3 Sec\Thindukkal Kalanthaivu.docx